

ஜல்லிக்கட்டு வழக்கில் சாதகமான தீர்ப்பை பெற்றுக் கொடுத்தமைக்காக புதுக்கோட்டையில் ஜல்லிக்கட்டு பேரவை சார்பில் நடைபெற்ற தமிழக முதலமைச்சருக்கான நன்றி தெரிவிப்பு கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன் அமைச்சர்கள் கே. என்.நேரு, எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், பி.மூர்த்தி, அனிதா ராதாகிருஷ்ணன், சிவ.வீ.மெய்யநாதன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.எஸ்.சிவசங்கர், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், எம்.எம்.அப்துல்லா எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, துரை.சந்திரசேகரன், டாக்டர் வை.முத்துராஜா, பழனியாண்டி, வெங்கடேசன், ஜல்லிக்கட்டு பேரவை மாநில தலைவர் பி.ராஜசேகரன், ரமேஸ் மற்றும் கழக முன்னோடிகள், ஜல்லிக்கட்டு பேரவை நிர்வாகிகள் உள்ளனர்.

## கிரீஸ் படகு விபத்து 81 பேர் பலி!

கலாமட்டா, ஜூன் 22-

கிரேக்க கடற்கரையில் அகதிகளை ஏற்றிக் கொண்டு சென்ற பெலோ பொன்னீஸில் படகு கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது.


தகவலறிந்து கடற்படைக் கப்பல்களுடன் ராணுவ விமானம் மற்றும் ஹெலிகாப்டர், 6 படகுகளும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

இந்த விபத்தில் சிக்கி 59 அகதிகள் உயிரிழந்துள்ளனர். மேலும் 104 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என முதல் கட்ட தகவல் வெளியானது. சர்வதேச கடல் பகுதியில் நிகழ்ந்த இந்த விபத்து பலத்த காற்றினால் ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில், தெற்கு கிரீசில் மேலும் 2 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இதையடுத்து கடலில் படகு கவிழ்ந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 81 ஆக உயர்ந்துள்ளது.

பலியானவர்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தானியர்கள் என தெரிய வந்துள்ளது. மீட்பு பணி தொடர்ந்து நடைபெறுகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; பா.ஜ.க.வுக்கு ஒருமுறை வாய்ப்புக் கொடுத்துப் பாருங்கள் என்று ராணுவ அமைச்சர் ராஜ்நாத்சிங் சொல்லி இருக்காரே?

**போண்டி :** ஆமாய்யா; மணிப்பூர்ல தீ எரியுற மாதிரி இங்கயும் பார்க்கவா?

### கடுமையான நிதி நெருக்கடியிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின்

# தமிழ்நாட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருகிறார்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜூன் 22 -

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தெற்கு ஒன்றிய தி.மு.க. கழகத்தின் சார்பில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சருகனியில் ஒன்றிய கழகச் செயலாளர் நாகனி ரவி தலைமையில் ஒன்றிய அவை தலைவர் சின்னத்துரை ஒன்றிய துணைச் செயலாளர்கள்கே .நம்பியார் என்ற கருப்பையா, சி.பாண்டி, திருமதி ஜெயராணிசெல்வேந்திரன், பொருளாளர் ஆர். செந்தில்குமார், ஒன்றிய கவுன்சிலர் என்.கோட்டைச்சாமி, பொருளாளர்ஆர்.செந்தில் குமார் மாவட்டபிரதிநிதிகள் எஸ். சாமிநாதன், ஆர்.ரவிச்சந்திரன், பி.கணேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் ஆதவன் என்ற சூர்யா வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன் முன்னாள் அமைச்சர் மாநில இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கழக கொள்கைப் பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி தலைமையில் இன்னிசை பட்டிமன்றம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் திருமதி ஜோன்ஸ் ரூசோ, கே. எஸ். எம். மணி முத்து, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்கு



மார் மாவட்ட விவசாய அணி துணை செயலாளர் ராஜபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தேவகோட்டை நகர செயலாளர் பெரி. பாலா, ஒன்றிய செயலாளர்கள் வழக்கறிஞர் பூபாலசிங்கம், லெ.மு.ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் மதார்சேட், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் எம்.சசிவர்ணம், மாவட்ட நெசவாளர்அணி சிவனேசன், மாவட்ட மாணவர் துணை அமைப்பாளர் அசோக், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் அழகையா, மாவட்ட இலக்கிய அணி ஆர்.சேவியர், தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் சொர்ணலிங்கம். சுவாதி ராமநாதன், சரவணன், ஒன்றியகவுன்சிலர்கள் திருமதி ஜான்ஸிராணி சூசைராஜா, திருமதி திலகவதிபூபாலசிங்கம், நிர்வாகிகள் ஆர்.எம். கென்னடி, எஸ். எஸ். ராஜரத்தினம், எம் .எஸ். சுப்பிரமணி, ஏழுமலை, தனபாலன், எஸ் சிவா, ஆர் .ராபர்ட், பி ஆரோக்கியம், ஆரோக்கிய சாமி, அம்பலநாதன், லாரன்ஸ், ஆஞ்சலோ பிரான்சிஸ், சேவியர், தாஸ், மாதவன்,. எஸ். பாண்டியன், ஆர்.சேகர், பால்ராஜ், எஸ்.ராமகுரு, மலைராஜ், எஸ். ஸ்ரீதர், எஸ். மாணிக்கம், பி . ரமேஷ், ராஜ்குமார், மூவேந்தரன் பாரதிதாசன், செல்வி செந்தில் குமார்,கார்த்திகே யன், சிமியோன், ஆல்பர்ட், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், நிர்வாகிகள் புதூர் கண்ணன், முத்துக்குமார் தொ.மு.ச. சண்முகநாதன், உட்பட நிர்வாகிகள் அதிக அளவில் தாய்மார்கள் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், திண்டுக்கல் ஐ. லியோனி, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாவட்ட கழகச் செயலாளருமான கேஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-

தமிழகத்தில் 95 ஆண்டு காலம் தமிழினம், மொழி, தமிழக மக்கள் மேம்பாட்டுக்காக பாடுபட்டவர் தலைவர் கலைஞர்.அவர் தனது வாழ்நாள் முழுவதும் தமிழக மக்களின் மேம்பாட்டிற்காகவும், தமிழக முன்னேற்றத்திற்காகவும் பணியாற்றியவர். அவருக்கு கழகத்தின் சார்பிலும் அரசின் சார்பிலும் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. ஓர் ஆண்டுக்கு நடைபெறும் இந்த விழாவில் பல்வேறு மக்கள் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.தமிழ் உள்ளவரை தலைவர் கலைஞரின் புகழ் நீடித்து நிற்கும் .50 வருடம் கழகத்தில் தலைவராக பணியாற்றி பல்வேறு சாதனைகளை செய்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா வழியில் செயல்பட்டு வந்தார்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில், தற்போதைய முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்கள் பணியாற்றி வருகிறார்.கடுமையான நிதி நெருக்கடியிலும் தொடர்ந்து மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். உலக அளவில் நமது தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடப் பட்டு வருகிறது. இந்திய நாட்டில் தலைவர் கலைஞரின் அரசியல் பணிகள் பாராட்டுக்குரியதாக அமைந்தது தி.மு.க ஒரு ஜனநாயக இயக்கம்ஆகும். பேறறிஞர் அண்ணா அவர்கள் தி.மு.க. பொதுக்கூட்டத்திற்குச் செல்வது மாலை நேரத்தில் வகுப்புகளுக்கு செல்வதாக போன்று அமைகிறது என்று கூறுவார்.

அது இன்று நிரூபணம் ஆகி வருகிறது. கழக தலைவர் தளபதி அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றதும் ஒன்றிய அரசு பல்வேறு வழிகளில் தமிழக அரசுக்கு பல்வேறு விதமான இடையூறுகளை செய்து வருகிறது. அதை தளபதி அவர்கள் சாதுரியமாக சமாளித்து வெற்றி பெறுவார். தமிழகத்தில் ஜனநாயகம் வீழ வேண்டும் என்று ஒன்றிய அரசு செயல்படுகிறது. அதை செயல்படுத்துவதற்காக ஆளுநர்ரவி அவர்கள் செயல்பட்டு வருகிறார். ஆனால் ஜனநாயகத்தை பாதுகாக்கும் இயக்கம் தி.மு.க.ஆகும். தமிழக மக்களை பாதுகாப்பதில் தலைவர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து வாழ்நாள் இறுதிவரை பணியாற்றினார்.

ஜனநாயகத்திற்கு எங்கு பாதிப்பு ஏற்பட்டாலும் அதை எதிர்த்து முதலாவதாக குரல் கொடுத்தவர் தலைவர் கலைஞர்ஆவார். பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். ஜனநாயகத்திற்கு எந்தவழியில் எத்தகைய தீங்குகள் ஏற்பட்டாலும், அதை எதிர்க்கும் முதல் குரல் தளபதி அவர்கள் குரலாகும். ஒன்றிய அரசின் பல்வேறு இடையூறுகள், நிதி நெருக்கடியில் தமிழகத்தில் பல்வேறு நல்ல மக்கள் நலத்திட்டங்களை முதல்வர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். இதை மக்களாகிய நீங்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் வழியில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதல்வருக்கு உங்களது ஆதரவினை தொடர்ந்து தந்திட வேண்டும். இவ்வாறு அமைச்சர் பேசினார். ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் சேவியர் ராஜா நன்றி கூறினார். கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தேவகோட்டை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் நாகனிரவி தலைமையில் தி.மு.க.நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், அசோகபுரி ஊராட்சியில் மாவட்ட பிரதிநிதி வேல்முருகன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கினார். ஒன்றியச் செயலாளர் ஜெ.ஜெயபால், மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர் செல்வம், மாவட்ட கண்காணிப்பு குழு எத்திராஜன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, ஒன்றிய நிர்வாகிகள் முரளி, வேல்முருகன், ராம்குமார், ஊராட்சி மன்றத் தலைவர் பஞ்சவர்ணம் குப்புசாமி, துணை தலைவர் இந்துமதி பாஸ்கர், ஒன்றிய இளைஞர் அணி பாலகிருஷ்ணன், சங்கர் கிளைச் செயலாளர்கள் ஜெயபால், மோகன்ராஜ், சிவக்குமார், பாஸ்கரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### என்.மருதுகணேஷ் தலைமை!

# ஜார்ஜ் டவுன் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## என்.ஆர்.இளங்கோ எம்.பி. பங்கேற்பு!

சென்னை ஜூன் 22 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளையொட்டி சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி மற்றும் ஜார்ஜ் டவுன் நீதிமன்ற கழக வழக்கறிஞர்கள் சார்பில் ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் அருகே பிறந்தநாள் விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என். மருதுகணேஷ் தலைமை தாங்கினார்.

சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தி, கேக் வெட்டி இனிப்பு வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளையொட்டி மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.அதன்பின் ஜார்ஜ் டவுன் நீதிமன்ற இளம் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகங்களை இலவசமாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கழக வழக்கறிஞர் டி.போஸ், கே. பொம்முராஜ், ஜெ. இராஜேந்திரன், எஸ்.பி. எஸ்.புத்தன், ஜெ.காணிக்கைநாதன், ஆர்.நடராஜன், எஸ்.சேகர், எஸ்.சரவணகுமார், ஜெ.தரணிதரன், எஸ்.ராஜேஷ், திருவொற்றியூர் போஸ், டி. மகாராஜன், எம்.ஜெய்சங்கர், எஸ்.தனசேகரன், ஏ. கே.உமாசங்கர், எச்.கருணாகரன், சி.ஸ்ரீதர்,மா. ரூப சங்கர், எஸ்.சசிதரன், எம்.பாக்கியராஜ், வி. கார்த்திக், டி.சீனிவாசன், எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன்டி, ஜெயசேகர், இ.வெங்கடேஷ்,குமார், ஆர்.வேலுச்சாமி, டி.மதன்ராஜ், ராயபுரம் கோகுல், ராயபுரம் பிரபாகரன், ஏ.விந்தன், கே.பழனியப்பன், எஸ்.லக்ஷ்மிபதி, டி.சக்திவேல், எம்.யாசர் அராபத், எஸ்.பீட்டர், வெற்றிச் செல்வன், எஸ். மதியழகன், எஸ்.மோகன சுந்தரம், ஏ.சாந்தகுமார், என்.யுகநாதன், கே.புருஷோத்தமன், ஆர்.வெங்கடேஸ்வரன், ஆர்.சந்தோஷ், ஆர்.மகேஸ்வரன், கே.ஆர்.காளிதாஸ் , ஆர். நரசிம்மமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட ஆலாபுரம் ஊராட்சி மருக்காலம்பட்டியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட அளவிலான மாபெரும் கிரிக்கெட் போட்டிகள் இளந்தென்றல் கிரிக்கெட் அணி சார்பில் ஆலாபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் பி.பழனியப்பன் தலைமையில், ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டது. உடன் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.கோவிந்தசாமி

**ஜூன் 22 (2002)**



**கழகம் தொடங்கிய நாளிலிருந்தே கழகத்தின் உறுப்பினராகப் பணியாற்றியவர்.**

**1959, 1964, 1968 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் தேர்தலில், மயிலை பகுதியிலிருந்து கழகச் சார்பில் தொடர்ந்து போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, ஆறுமாதம் சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**அறிஞர் அண்ணா அவர்களால் 'சாது' கோவிந்தசாமி என்று செல்லமாக அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் சுதந்திர பொன்விழா கேடயம் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**